## 16. பொறையுடைமை

151. *அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை*

**தம்மைக் குழி தோண்டுபவரை கூடத்**
**தயங்காமல் தாங்கும் நிலம் போலத்**
**தம்மை இகழ்ந்து பேசுபவரையும்**
**தயங்காமல் தாங்கிக் கொள்வது**
**தலை சிறந்த பண்பாகும் !**

152. *பொறுத்த லிறப்பினை யென்றும் அதனை*
*மறத்த லதனினும் நன்று*

**வரம்பு மீறி இழைத்த தீங்கை**
**வலியுடன் பொறுப்பது நற்பண்பு ! அதனைத் தன்**
**வாழ்வில் மறத்தல் அதனினும்**
**வல்லமை பொருந்திய நற்பண்பு !**

153. *இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்*
*வன்மை மடவார்ப் பொறை*

**வறுமையிலும் கொடிய வறுமை**
**வந்த விருந்தினரை புறக்கணிப்பது !**
**வலிமையிலும் சிறந்த வலிமை**
**வல்லமை இல்லாத அறிவிலிகளின் தீங்கைத் தாங்குவது !**

154. *நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை*
*போற்றி யொழுகப் படும்*

**நிறைவான மனிதர் இவரென்று**
**நிறைய பொறுமை உடையவரை –**
**நிரந்தரமான மன உறுதி கொண்டவரை**
**நித்தம் இவ்வுலகம் போற்றும் !**

155. *ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்*
*பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து*

**பொறுக்காமல் தாம் தீங்கு செய்தாரை – அப்**
**பொழுதே தண்டித்தோரை உலகம் மதிக்காது !**
**பொறுத்துக் கொண்டு தண்டிக்காதவர்களை**
**பொன்னாகப் பூவுலகம் மதிக்கும் !**

**156.** *ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்*

**தங்களுக்கு தீமை செய்தவரை உடனடியாக
தண்டித்தவர்க்கு அன்று மட்டுமே இன்பம் !
தண்டிக்காமல் பொறுத்துக் கொண்டவர்க்கு
தரணி உள்ளவரை புகழே !**

**157.** *திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று*

**தகுதியில்லாத இழிவான காரியங்களை
தமக்குப் பிறர் செய்தாலும் வருந்தி தானும்
தகுதியற்ற அதே அறமில்லாத காரியங்களைத்
தரம் கெட்டு செய்து பழி வாங்காமல் இருப்பது நன்று !**

**158.** *மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்*

**பொருமும் இறுமாப்பால் நமக்குத் தீமை செய்தாரை – நம்
பொறுமைச் சிறப்பால் வெல்லலாம் – நாம்
பொறுத்துக் கொள்வதன் மூலம் வெற்றியே
பொங்கும் !**

**159.** *துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்*

**துன்பம் தரும் கொடுஞ் சொற்களை
துணிவோடு பொறுத்துக் கொள்பவர்கள்
துறவிகளைக் காட்டிலும் தூய்மையானவர்கள் !**

**160.** *உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொ னோற்பாரிற் பின்*

**உண்ணா நோன்பு இருந்து பசி பொறுத்துப் போகும்
உறுதி படைத்தவர்களை விட
உண்மையில் பிறரின் கொடுஞ் சொற்களை
உள்ளத்தால் பொறுப்பவர் பெரியோரே !**